**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**C.C.No :- 283/2019**

**Prosecution witness :-( P.W.1)**

**Date :-03.10.2023**

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.கல்யாணி | Caste | |
| S/o | திரு.சிவராமகிருஷ்ணன் | Calling | இல்லத்தரசி |
| Village | ஸ்ரீரங்கம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 54/2023 |

**எதிரி ஆஜர் , எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பு முதல் விசாரணை:-**

நான் ஸ்ரீரங்கம் ராகவேந்திர பகுதியில் உள்ள ஜெய் சுதர்சனா அப்பார்ட்மெண்ட்டில் வீட்டு குடிதனம் செய்து வருகிறேன் . கடந்த 23.11.2015 ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் என்னுடைய வீட்டில் இருந்த போது வீட்டின் கதவை யாரோ தட்டினார்கள் . பிறகு நான் கதவை திறந்து பார்த்தேன். அப்போது ஆஜர் எதிரியை பார்த்தேன் . அப்போது ஆஜர் எதிரி என்னிடம் வீடு வாடகைக்கு உள்ளதா என்று என்னிடம் கேட்டார் அதற்கு நான் வீடு வாடகைக்கு இல்லை என்று ஆஜர் எதிரியிடம் சொன்னேன். அப்போது நான் கதவை மூடுவதற்காக முயற்சி செய்த போது ஆஜர் எதிரி கதவை உள்ளே தள்ளி என் வீட்டிற்குள் வந்து எனது கழுத்தில் இருந்த செயின் மீது கையை வைத்து பறித்தார் . ஆஜர் எதிரி என் செயினை பறிக்கும் போது நான் தடுக்க முயற்சி செய்தும் என்னால் முடியவில்லை. எதிரி பறித்து விட்டார் . பிறகு எதிரி செயினுடன் கீழே இறங்கி ஓடிவிட்டார் . அந்த செயின் 4 பவுன் தாலிகுண்டு 1 பவுன் மொத்தம் 5 பவுன். பிறகு நான் வீட்டை விட்டு வெளியே வந்து கத்தினேன். எதிரி ஒரு ஸ்கூட்டி மாதிரி ஒரு வாகனத்தில் ஓட

முயற்சித்தார் நான் சத்தம் போடவே அந்த பக்கம் இருந்த ஆட்டோ ஸ்டேண்டில் உள்ளவர்கள் உடனே ஓடி போய் ஆஜர் எதிரியை பிடித்தார்கள். பிறகு நான் போலீசாருக்கு போன் செய்து வரவழைத்தேன். பிறகு நான் எனது கணவருக்கும் போன் செய்து வரவழைத்தேன் . பிறகு எனது கணவர் நேரிடையாக காவல் நிலையம் வந்தார் . நானும் காவல் நிலையம் சென்று விட்டேன். ஆஜர் எதிரியை பொதுமக்கள் அடித்தார்கள். என் நகையை பறித்து சென்றதால் அடித்தார்கள்.

பிறகு ஆஜர் எதிரியை காவல் நிலையத்தில் ஒப்படைத்தனர்.தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தேனா அந்த புகார் நான் கொடுத்தது தான். அந்த புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீ டு செய்யப்படுகிறது. பிறகு போலீசார் எதிரி பறித்த நகையை நீதிமன்றத்தில் ஒப்படைத்து விட்டனர். பிறகு நான் கோர்ட் மூலம் நகையை பெற்று சென்றேன் . நகையை பெற்று சென்றேன் அந்த நகை என்னுடைய வீட்டில் இருக்கிறது. என்னிடம் போட்டோவில் காட்டப்படும் நகை தான் அந்த போட்டோக்கள் இரண்டு அ.சா.ஆ 2 ஆக எதிரி தரப்பு ஆட்சிபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது . போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–

அப்பார்மெண்டில் எத்தனாவது தளத்தில் குடியிருந்து வருகிறேன் என்றால் முதல் மாடியில் . மொத்தம் எத்தனை தளங்கள் கொண்ட கட்டிடம் என்றால் அடிதளம் , முதல் தளம், இரண்டாவது தளம் போன்ற கட்டிடம். எல்லா தளங்களிலும் ஆட்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். ஒவ்வொரு தளத்திலும் எத்தனை வீடுகள் உள்ளது என்றால் நான் இருந்த தளத்தில் 3 வீடுகள் உள்ளது. அதே போன்று மேல்

தளத்திலும் கீழ் தளத்திலும் உள்ளது என்றால் ஆமாம் . மூன்று தளத்திற்கும் ஒரே மாடிபடி தான் என்றால் ஆமாம் . முதல் தளத்திற்கு மாடிபடி சென்றதும் மூன்று வீடு வாசபடியும் எதிர் எதிரான வாசல்களாக அமைந்து உள்ளது ஆமாம் . ஒரு வாசல் படிக்கும் எத்தனை அடி இடைவெளி உள்ளது என்றால் 5 அடி இருக்கும். நான் சத்தம் போடவும் அருகில் இருந்த வீட்டில் உள்ளவர்கள் சம்பவத்தை பார்த்தார்கள் என்றால் ஒரு வீடு பூட்டி இருந்தது . மற்றொரு வீட்டில் இருந்தவர்கள் பார்த்தார்கள். நான் முதல் விசாரணையில் சொன்னது போன்று கீழே உள்ள ஆட்டோ ஸ்டேண்டில் உள்ளவர்கள் பிடித்ததாகவும் , ஆட்டோ ஸ்டேண்டில் உள்ளவர்களும் பொது மக்களும் அடித்ததாகவும் , காவல் நிலையத்தில் ஒப்படைத்தாகவும், காவல் நிலையத்திலேயே நகையை பெற்று கொண்டாகள் என்றால் சரிதான். அதன் பின்பு சம்பவ நடந்த 11.30 மணியளவில் என்றால் 12.00 மணிக்கு எனது கணவருக்கு தகவல் கொடுத்து கணவருடன் காவல் நிலையம் சென்று விட்டேன் என்றால் சரிதான். புகார் கொடுக்கும் போது 12.00 மணி இருக்கும் என்றால் சரிதான். நான் காவல் நிலையத்திற்கு போகும் போது ஆட்டோ ஸ்டெண்டில் உள்ள அப்பு என்ற நாகராஜ், பாபு, கண்ணதாசன் எல்லாரும் காவல் நிலையத்தில் இருந்தார்கள் என்றால் சரிதான்.

புகாாரை யார் எழுதினார்கள் என்றால் போலீசார் எழுதினார்கள் . படித்து பார்த்து கையெழுத்து செய்தேன் . அந்த ஒரு கையெழுத்து தவிர எப்போதுமே கையெழுத்து செய்தேன் என்றால் நியாபகம் இல்லை , போடவில்லை. நான் கையெழுத்து போடும்போது அப்பு என்ற நாகராஜ், பாபு காவல் நிலையத்தில் என் முன்பாக கையெழுத்து செய்தார்கள் என்றால் சரிதான். அதன் பின்பு எங்கு வைத்தும் சாட்சி சம்மனில் கையெழுத்து செய்யும் வரை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான் . கதவை

சாத்த முயற்சி செய்தேன் அதனை மீறி உள்ளே வந்தார் என்ற விவரத்தை புகாரில் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான் . பால்கணியில் எட்டி பார்த்தேன் ஸ்கூட்டரில் எடுத்த ஓட முயற்சித்தார் என்பதையும் புகாரில் எழுதி கொடுத்தேன் என்றால் ஆமாம் . அதே போன்று ஆட்டோ ஸ்டெண்டில் உள்ளவர்களும் பொது மக்களும் பிடித்து கொண்டார்கள் என்பதையும் எனது புகாரில் எழுதி கொடுத்திருக்கிறேன் என்றால் ஆமாம். அந்த புகாரில் செயின் 4 பவுன், தாலி குண்டு 1 பவுன் என்று எழுதி கொடுத்துள்ளேன் என்றால் சரிதான் . தற்போது என்னிடம் காட்டப்படும் வழக்கு புகாரில் மேற்கண்டவாறு உள்ளதா என்றால் இல்லை. நான் எழுதி கொடுத்த புகார் வேறு வழக்கில் உள்ள புகார் வேறு என்றும் நான் கொடுத்த புகாரே இல்லை என்று சொன்னால் தற்போது தான் நீங்கள் சொல்லி எனக்கு தெரிய வருகிறது . போலீசார் வெள்ள பேப்பரில் கையொப்பம் பெற்று கொண்டு அவர்கள் எழுதி கொள்வதாக சொன்னார்கள் சரியல்ல. அ.சா.ஆ 2 போட்டோவில் செயின் அறுந்து போகாமல் உள்ளது என்றால் சரிதான் . அதில் கண்டுள்ள மஞ்சள் கயிறு புது கயிறு என்றால் சரிதான். அடையாள அணிவகுப்பு நடத்தி அடையாளம் காட்ட சொன்னார்கள் என்றால் இல்லை . ஜன்னல், கதவு ஆகியவைகளிலிருந்து கை ரேகையை நிபுணர் மூலம் பார்வையிட்டு கைப்பற்றினார்களா என்றால் இல்லை.

நான் காவல் நிலையம் சென்ற போது எதிரி அங்கு உட்கார்ந்திருந்த போது அவரிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் ஆமாம் . அந்த நகை எங்கு வாங்கப்பட்டது என்றால் கும்பகோணம் சாரங்கபாணியில் வாங்கப்பட்டது. அதற்குரிய ரசீது உள்ளதா என்றால் உள்ளது . அதனை போலீசாரும் கேட்கவில்லை நானும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.எதிரி ஜாதகம் பார்க்ககூடிய நபர் என்றால் எனக்கு தெரியாது

சொல்லி கேள்விபட்டிருக்கிறேன் . எதிரி சமயபுரம் ,நான்கு ரோடு தனலெட்சுமி காம்ளக்ஸில் ஜாதகம் பார்ப்பதற்காக கடை எடுத்து சுற்று வட்டார பகுதியில் பார்த்து வருகிறார் என்றும் , ஆகையால் தினசரி நாளிதழ்களில் துண்டு பிரசுரத்தை வைத்து கொடுத்து வந்துள்ளார் என்றும், என்னிடம் யாரோ நகையை எடுத்து சென்றதை பயன்படுத்தி துண்டு பிரசுரத்தை பயன்படுத்தி போலீசார் இந்த வழக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரியல்ல . எதிரி என்னுடைய வீட்டிற்கும் வரவில்லை நகையையும் பறிக்கவில்லை என்றால் சரியல்ல . எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல . போலீசார் இந்த வழக்கை முடிப்பதற்காக என்னிடம் எழுதபடாத வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்று ஜோடித்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

Sd/–xxx
Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made his signature
Sd/–xxx
District Munsif – Cum – Judicial Magistrate,
Srirangam.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**C.C.No :– 283 /2019**

**Prosecution witness :–( P.W.2)**

**Date :–03.10.2023**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.சிவராமகிருஷ்ணன் | Caste | |
| S/o | திரு.பாலசுப்பிரமணியன் | Calling | |
| Village | ஸ்ரீரங்கம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 63 /2023 |

**எதிரி ஆஜர் , எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பு முதல் விசாரணை:–**

ஸ்ரீரங்கம் ராகவேந்திரபுரம் ஜெய்சுதர்சனா அப்பார்ட்மெண்ட் வசித்து எலக்டாரிக் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 கல்யாணி எனது மனைவி .23.11.2015 ம் தேதி பகல் 11.00 மணியளவில் நான் ஸ்ரீரங்கம் ஈபி ஆபிஸ்க்கு சென்றிருந்தேன். பிறகு 11.30 மணியளவில் எங்களது குடியிருப்பு வளாகத்தில் இருந்து எனக்கு போன் செய்து எனது மனைவி கழுத்தில் அருந்த செயினை பறித்து சென்றதாக தகவல் கூறினார்கள். பிறகு நான் பகல் 12.00 மணியளிவில் ஸ்ரீரங்கம் காவல் நிலையத்திற்கு சென்றேன். அப்போது எனது மனைவி மற்றும் எங்களது குடியிருப்பை சார்ந்தவர்கள் அங்கு இருந்தார்கள். பிறகு நான் எனது மனைவி அ.சா.1 இடம் நடந்த சம்பவம் பற்றி கேட்டேன். அப்போது அவர் ஒரு நபர் நமது வீட்டிற்கு வந்து வாடகைக்கு வீடு இருக்கிறதா என்று கேட்டு என் கழுத்தில் இருந்த செயினை பறித்து சென்றதாக கூறினார். நான் செயினை பறித்தது யார் என்று கேட்டபோது எனது மனைவி ஆஜர் எதிரியை காவல் நிலையத்தில் இருக்கும் போது அடையாளம் காண்பித்தார். பிறகு நாங்கள் செயின்

பறித்தது பற்றி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். புகாரை நாங்கள் சொல்ல சொல்ல அருகில் இருந்த ஒரு காவலர் எழுதினார். அதை நாங்கள் படித்து பார்த்து எனது மனைவி கையொப்பம் செய்தார். பிறகு நகையை நீதிமன்றத்தில் போலீசார் ஒப்படைத்தனர். பிறகு ஒரு வழங்கறிஞரை வைத்து நகையை நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்றோம். அந்த நகை செயின் 4 பவுன் தாலி குண்டு 1 பவுன் , போலீசார் வந்து என்னிடம் விசாரணை செய்தார்கள் நடந்த விவரம் பற்றி கூறினோம்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-

எனது மனைவி எதிரியை காவல் நிலையத்தில் வைத்து அடையாளம் காண்பித்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் கூறினேன் என்றால் கூறினேன். என் மனைவி புகார் கொடுக்கும் போது காவல் நிலையத்தில் உள்ள ஒரு காவலர் புகாரை எழுதினார் . அந்த புகார் சரியாக உள்ளது என்று எனது மனைவி கையொப்பம் செய்தார் என்ற விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சொல்லி உள்ளேன். அதேபோல செயின் 4 பவுன், தாலி குண்டு 1 பவுன் உள்ளது என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் .மேற்கண்ட எந்த ஒரு விவரத்தையும் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றும் தற்போது நீதிமன்ற விசாரணையில் மிகைபடுத்தி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ விவரங்கள் அனைத்தும் எனது மனைவி சொல்லி தெரியும் என்றால் சரிதான் . வழக்கினை மிகைபடுத்துவதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-xxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-xxx

District Munsif - Cum - Judicial Magistrate,

Srirangam.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**C.C.No :- 283 /2019**

**Prosecution witness :-( P.W.3)**

**Date :-03.10.2023**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.நாகராஜன் | Caste | |
| S/o | திரு.மாரிமுத்து | Calling | ஆட்டோ ஓட்டுநர் |
| Village | ஸ்ரீரங்கம் | Religion | |
| Taluk | ஸ்ரீரங்கம் | Age | 51 /2023 |

**எதிரி ஆஜர் , எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்.**

**அரசு தரப்பு முதல் விசாரணை:-**

நான் ஸ்ரீரங்கம் இரயில்வே ஸ்டேசன் அருகே வசித்து ஆட்டோ ஓட்டி வருகிறேன். கடந்த 8 வருடங்களுக்கு முன்னால் பகல் 11.30 மணிக்கு மேல் இருக்கும் நான் ராகவேந்திரா ஆட்டோ ஸ்டேண்டில் இருந்தேன். அப்போது என்னுடன் கண்ணதாசன், பாபு ஆகியவருடன் பேசி கொண்டிருந்தேன். அங்கு பொது மக்கள் நடமாட்டம் இருந்தது. அப்போது ஆட்டோ ஸ்டெண்டிற்கு எதிரே உள்ள சுதர்சனா அப்பார்ட்மெண்டில் முதல் மாடியில் இருந்து பிடிங்க, பிடிங்க என்று சத்தம் கேட்டது. அப்போது அந்த அப்பார்ட்மெண்டிலிருந்து கீழே ஒரு நபர் வெளியே ஓடிவந்தார். அவர் எங்கள் ஆட்டோ ஸ்டேண்டை தாண்டி ஓட முயற்சி செய்தார். பிறகு நான் , கண்ணதாசன், பாபு மற்றும் பொது மக்களும் சேர்ந்து அந்த நபரை பிடித்தோம். அந்த நபர் ஒல்லியாக இருந்தார் நீதிமன்றத்தில் அந்த நபர் உள்ளரா என்றால் அடையாளம் தெரியாது இல்லை. ஆஜர் எதிரியா என்று அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டபோது இல்லை என்று சாட்சி கூறினார். 8 வருடம் ஆனதால் எனக்கு ஞாபகம்

இல்லை. பொது மக்கள் போன் செய்ததால் போலீசார் வந்து விட்டார். காவல் நிலையத்திற்கு கூப்பிட்டார்கள் பெயர் மட்டும் கேட்டார்கள். தற்போது காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய கையெழுத்து தான். அந்த கையெழுத்து பிடித்து வைத்து இருந்ததற்காக கையெழுத்து கேட்டார்கள் நானும் பாபும் கையெழுத்தும் செய்தோம். எதற்காக கையெழுத்து செய்தோம் என்றால் எதிரியை பிடித்து வைத்ததற்காக கையெழுத்து செய்தோம். எதிரி எதுவும் சொன்னாரா என்றால் இல்லை. ஆனால் அவரது கையில் தாலி செயின் நகை இருந்தது. தற்போது காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் என்னுடைய கையொப்பம் உள்ளது. அதில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான். ஒப்புதல் வாக்கு மூலத்தில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.நான் கையெழுத்து செய்யும் சைடில் எழுதவில்லை 1,2 மட்டும் போடபட்டிருந்தது அதில் கையெழுத்து செய்தேன்.

பிறகு சம்பவ நடந்த அன்று மதியமே கமிசனர் அலுவலகத்திற்கு என்னையும் பாபுவையும் அழைத்து சென்றார்கள். எதற்காக அழைத்து சென்றார்கள் என்றால் எதிரியை பிடித்து போலீசாரிடம் ஒப்படைத்ததால் அதற்காக எனக்கும் பாபுவிற்கும் போலீசார் அவார்டாக ரூ.500/– கமிசனர் கபிலன் அவர்கள் பாராட்டி வாழ்த்து தெரிவித்தார். பிறகு மறுநாள் பொன்மலை ஐஜி அலுவலகத்திற்கும் சென்று பாராட்டு சான்றிதழும் வெகுமதியாக ரூ.500/– கொடுத்தார்கள். நான் பிடித்து கொடுத்த எதிரியின் பெயர் காந்தி. போலீசார் சம்பவத்தன்று அங்கு வந்து விசாரித்தார்கள்.

சாட்சி அ ரசு தரப்பு சாட்சியத்தில் பகுதியாக சார்ந்து சாட்சியம் அளிக்காததால் அரசு தரப்புக்கு குறுக்கு விசாரணைக்கு கேட்க்கப்பட்ட து அனுமதிக்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-**

கடந்த 23.11.2015 ம் தேதி பகல் 11.00 மணியளவில் எங்கள் ஆட்டோ ஸ்டேண்டில் எதிரே உள்ள அப்பார்ட் மெண்டில் அ.சா.1 இடம் செயின் பறித்தது தொடர்பாக சம்பவத்தின் போது ஆட்டோ ஸ்டெண்டில் நான் இருந்த போது ஆஜர் எதிரியை தான் நான் பிடித்து கொடுத்தேன் என்றால் சரியாக தெரியாது. இருக்கலாம் சரியாக அடையாளம் தெரியாது. நானும் பாபும் பொது மக்களும் சேர்ந்து எதிரியை தான் பிடித்து கொடுத்தோம் என்றால் சரியாக தெரியாது. ஆஜர் எதிரி டுவிலரில் போனாரா என்றால் ஒரு நபர் ஓடி போனார். அதன் பிறகு போலீசாரிடம் வாக்கு மூலம் கொடுத்தாரா என்றால் இல்லை. நான் படித்து பார்க்காமல் 1,2 என்ற இடத்தில் கையெழுத்து செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் போலீசாரிடம் எடுத்த கொடுத்த நகைக்கு கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்து செய்தேன் என்றால் 1,2 என்ற இடத்தில் தான் கையெழுத்து செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜரில் என்னுடன் பாபும் கையெழுத்து செய்தார் என்றால் ஆமாம். மேற்படி சம்பவம் குறித்து போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரியை பிடித்து கொடுத்து மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்த போதும் ஆஜர் எதிரி இருந்தார் என்றும் அவரை அடையாளம் காட்டினோம் என்றாலும் சரியல்ல. போலீசார் விசாரணையில் உண்மையை சொல்லிவிட்டு

Vaa

தற்போது ஆஜர் எதிரியை இவ்வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

கைப்பற்றுதல் மகஜரில் காட்டப்படுகிறது . அதில் Right side ல் எழுதபடவில்லை அதில் கையெழுத்து செய்தேன் . பாபு என்பவர் கையெழுத்து செய்த போது நான் இல்லை அவர் எதில் கையெழுத்து செய்தார் எப்பொழுது போட்டார் என்றால் எனக்கு தெரியாது . ஒப்புதல் வாக்கு மூலம் , கைப்பற்றுதல் மகஜர் கையெழுத்துக்கள் காவல் நிலையத்தில் கையெழுத்து செய்தனர் என்றால் ஆமாம் . ஆட்டோ ஓட்டுநர் என்ப்தால் அதற்கு சட்டப்படி சீருடை மற்றும் ஆட்டோக்குரிய ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும் என்றால் சரிதான் . அதில் தவறு ஏதும் இருந்தால் வழக்கு போடுவார்கள் என்றால் சரிதான். நான் ஆட்டோ ஓட்டுநர் என்பதால் தவறு ஏற்பட்டு விடும் என்பதால் போலீசார் தயவு வேண்டும் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல . முதல் விசாரணையில் காவல் உயர் அதிகாரிகள் அவார்டு கொடுத்ததாக சொல்லுவது மிகைபடுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-xxx

Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-xxx

District Munsif - Cum - Judicial Magistrate,
Srirangam.

Adda